DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 174/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சூர்யா** (P.w3) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of November 2025

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :–**

1. நான் களத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிசீயனாக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 18.06.2023ம் தேதியன்று மாலை 5.00மணிக்கு நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த நாகராஜ் என்பவரும் எங்கள் ஊர் டீ கடை அருகே நின்று கொண்டிருக்கும்போது அங்கு வந்த அ.முக்குளம் சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற

எண்.94/2023 வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் நாகராஜ் என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 174/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : **வினோத்குமார்** (P.w2)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of November 2025

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :-**

நான் களத்தூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 எனது ஜெயராஜ் எனது அப்பா. கடந்த 3வருடத்திற்கு முன்னர் குமார் டீ கடை அருகில் வைத்து கூட்டமாக இருந்தது. அங்கு கூட்டத்தில் யாரோ எனது அப்பாவை தள்ளிவிட்டார்கள். அதில் எனது அப்பாவிற்கு நெற்றி பகுதியில் காயம் ஏற்பட்டது. நான் எனது அப்பாவை திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு எனது அப்பா 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அ.த.கு.வி :–

கடந்த 18.06.2023ம் தேதியன்று காலை 8மணியளவில் VAO அலுவலகம் அருகில் உள்ள முத்துக்குமார் டீ கடையில் டீ குடிக்க போவதாக சொல்லி சென்றதாகவும் அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த தவமுத்து என்பவரும் ராஜசேகர் என்பவரும் கோயில் திருவிழா சம்பந்தமாக வாய் தகராறு செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது எனது அப்பாவும் அந்த வழியாக செல்ல இதை பார்த்த பெரியப்பா நடராஜன் தவமுத்துக்கு என் அப்பாவுக்கு சப்போட்டுக்கு வருகிறார் என்று நினைத்துக்கொண்டு அவருடைய வீட்டிற்கு போய் கம்பி எடுத்து வந்து என் அப்பாவை நீ எதுக்குடா சண்டைக்கு வந்த என்று அவர் முதுகில் அடித்ததாகவும் எனது இன்னொரு பெரியப்பா முத்துசெல்வம் அவருடன் சேர்ந்து கொண்டு கட்டையால் ஓங்கி அவரும் முதுகில் அடித்ததாகவும் மற்றொரு மகன் அன்புசெல்வம் கம்பால் எனது அப்பாவின் வலது கையில் அடித்ததாகவும் என் பெரியப்பா நடராஜன் மகன் செல்வமுத்துவும் என் அப்பாவை கம்பால் அடித்ததாகவும், குமார் மனைவி சகுந்தலாதேவி கல்லாள் முதுகில் எறிந்ததாகவும் அங்கி இருந்தவர்கள் மற்றும் நானும் ராஜசேகரும் அவர்களை சத்தம் போடவும் அவர்கள் என் அப்பாவை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றதாகவும் பின்பு நானும் ராஜசேகரும் காயம்பட்ட என் அப்பாவை இருவரும் இரு சக்கர வாகனத்தில் திருச்சுழி மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.